மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 231, திரு. ராதாரவி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

231—

மானியத் தொகை

***32796—திரு. ராதாரவி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறிய பட்ஜெட் படத் தயாரிப்பாளர்களுக்கு அரசு அளிக்கும் மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அதை அதிகரித்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் அளிக்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்யப்படும் படங்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

முற்பகல் 11-00

திரு. ராதாரவி: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே. இது என்னுடைய கன்னிக் கேள்வி. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால்தான் நீங்கள் கேள்வியைக் கேட்டு, அமைச்சர் விடை சொல்கின்ற வரைக்கும் பேரவையின் முன்னனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ராதாரவி: என்னுடைய தொழிலைச் சேர்ந்த கேள்வி அனுமதிக்கப்பட்டதற்கு நன்றியைச் சொல்லி, மாண்புமிகு இதய

2003 ஏப்ரல் 10]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னான பாதங்களைத் தொட்டு வணங்கி வினாவைக் கேட்கிறேன். ஏற்கெனவே சினிமா எல்லாம் செத்துக்கொண்டிருக்கின்ற நேரம் இது. அதனாலே, சிறிய படங்களுக்கு தயவுசெய்து இப்பொழுது 35 பிரிண்டுகளாக மாற்றி, அதைப் பதினைந்து இலட்சமாக தருவதற்காக அவர்கள் ஒரு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதேபோல, பெரிய படத்திற்கும், சிறிய படத்திற்கும் ஒரே வரியை விதிக்கிறார்கள். சிறிய படத்திற்கு 5 சதவீதம் என்றால், சிறிய படங்களை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதேபோல Single Window System அதாவது தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம்மூலம் கிடைக்கும் அந்த permission அதை வெளியே எடுத்துச் செல்லும்போது வனத் துறை, மின் துறை, பொதுப் பணித் துறை, அறநிலையத் துறை போன்ற துறைகளிடம் மீண்டும் ஒப்புதல் பெறவேண்டியிருக்கிறது. அதை மாற்றியமைத்துக் கொடுக்கவேண்டும். அதேபோல, இப்பொழுது ஊட்டியில் இரண்டு மாதத்திற்கு சூட்டிங்கே எடுக்கக்கூடாது என்று ஒரு ஆர்டர் போட்டிருப்பதாகக் கேள்வி. இரண்டு மாதங்கள் சூட்டிங் ஊட்டியிலே எடுக்கவில்லையென்றால் பெரிய படங்கள் எல்லாம் ரொம்ப பாதிக்கப்படும். ஏனென்றால் ஏற்கெனவே எல்லோருடைய தேதிகள் எல்லாம் வாங்கி வைத்திருப்பார்கள். அதனாலே, பாதிப் படம் எடுத்த நிலையில், வேண்டாம் வெளியே போய் எடுங்கள் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் மாற்றி அமைக்கவேண்டும்.

அதேபோல, இந்தத் திருட்டு வி.சி.டி. அதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள. அதற்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இதைப்போல நல்ல பல திட்டங்களை, ஏனென்றால், இன்று முதலமைச்சராக இருக்கும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய தொழிலைச் சார்ந்த இடம் இது, சினிமா என்பது. அதனால், நான் கேட்ட கேள்விகளுக்கு நல்ல ஒரு பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்திற்கு விண்ணப்பிக்கும் திரைப்படங்கள் கீழ்க்கண்ட முக்கிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று அரசின் விதிமுறைகள் இருக்கின்றன. ஒன்று, மைய அரசின் திரைப்படக் குழுவின் தணிக்கைப் பிரிவினால் சான்று அளிக்கப்பட்டிருக்கவேண்டும். 3,000 மீட்டர் நீளத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். திரைப்படத்தின் பிரதிகள் எட்டிலிருந்து இருபத்தைந்திற்குள் மட்டுமே இருக்கவேண்டும். மானியத்திற்கான ஆண்டு, ஜனவரி 1-ஆம் நாளிலிருந்து, டிசம்பர் 31-ஆம் நாளுக்குள் திரைப்படம் வெளியிடப்பட்டிருக்கவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள ஆய்வகத்தில் negative develop செய்யப்பட்டு, பிரதிகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் குறைந்தபட்சம் 5 முழு கால்ஷீட்டுகள் படம் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். நேரடி தமிழ்த் திரைப்படமாக இருக்கவேண்டும் என்ற 7 நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்தக் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் அளிக்கும் திட்டம் இதன்கீழ் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை 1992-ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 75 திரைப்படங்கள் வரை மானியம் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைகளை நிச்சயமாகப் பரிசீலித்து, சிறப்பாக அவை செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறவில்லை. இரண்டு மாத காலத்திற்கு ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுற்றுலாத் தலங்களில் படப்பிடிப்புகள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்த முடிவை மறுபரிசீலனை

2003 ஏப்ரல் 10]

செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி கேட்டுக்கொண்டார். அந்தத் தடை உத்தரவை மறுபரிசீலனை செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரைப்படங்கள் என்பவை பொதுமக்களின் மனமகிழ்விற்காக எடுக்கப்படுகின்ற படங்கள் ஆகும். ஆகவே, சிறிய படமோ, பெரிய படமோ, படப்பிடிப்பு நடக்கும்போது, பொதுமக்களுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படக்கூடாது என்பதுதான் இந்த அரசின் கொள்கை. ஏப்ரல், மே மாதங்களில்தான் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் விடுமுறைகள் விடப்படுகின்றன. பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு வருகிறார்கள். பலபேர் குடும்பத்தோடு இந்த விடுமுறை நாட்களை அங்கே கழிக்க வருகிறார்கள். அந்தச் சுற்றுலாப் பயணிகள் செல்லும் இடங்களில் எல்லாம்கூட அப்போது படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தால் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும். மேலும், இந்தத் திரைப்பட யூனிட்டுகள், பொட்டானிக்கல் கார்டன்ஸ் மற்றும் இயற்கை எழில் மிக்க இடங்களில் படப்பிடிப்பை நடத்திவிட்டுச் செல்லும்போது, அந்த இடத்தையே துவம்சம் செய்துவிடுகிறார்கள்; நாசம் செய்துவிடுகிறார்கள். ஆகவேதான், அரசு இந்த முடிவை எடுத்து, இந்த Holiday season, விடுமுறைக் காலம் முடிகின்றவரை படப்பிடிப்புகளை அனுமதிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறது. இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS